அன்புள்ள மாணவர்களுக்கு,

## துணைவேந்தரின் செய்தி,

21 ஏப்ரல் 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடைபெற்ற பல்வேறு சோக நிகழ்வுகளின் காரணமாக பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயற்பாடுகளை பல வாரங்களாக நிறுத்திவைப்பதற்கு நாம் கட்டாயப்படுத்தப்பட்டது நீங்கள் அறிந்ததே. நாம் இப்பொழுது கல்வி நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிக்கவும் விரைவில் அவற்றினை வழமையான நிலைக்கு கொண்டுவரவும் தயாராக இருக்கின்றோம்.

நீங்கள் பல்கலைக்கழகத்திற்கு மீண்டும் வருகை தருகின்ற போது பல்கலைக்கழக வளாகத்தில் குறிப்பிடத்தக்களவு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டிருப்பதனை அவதானிக்கலாம். இவை தேசிய பாதுகாப்பினை கருத்திற் கொண்டு ஜனாதிபதி செயலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, நகரத்திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு மற்றும் தேசிய பாதுகாப்பு நிறுவகங்கள் என்பவற்றினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளன. முழுப் பல்கலைக்கழகச் சமூகத்தினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக நாம் இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம். தேவைப்படும் போது நிலைமைகள் எம்மால் மீளாய்வு செய்யப்படும் என்பதுடன் இவற்றுள் பெரும்பாலான நடவடிக்கைகள் தற்காலிகமானவையே என நாம் நம்புகின்றோம். நாட்டிற்கு ஏற்பட்டுள்ள இந்த சவாலான நேரத்திலே எம்முடன் இணைந்து செயற்படுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களில் பெரும்பாலானோர் பல்கலைக்கழத்திற்கு மீண்டும் வருகை தருவதில் அச்சமாய் இருப்பதனை நான் புரிந்து கொள்கின்றேன். எவரையும் நம்ப முடியாமை அல்லது ஒருவரையொருவர் அச்சத்துடனும், சந்தேகத்துடனும் பார்க்கின்ற ஒரு நிலைமை தோன்றியிருப்பதாக நீங்கள் உணரக்கூடும். இது போன்ற கொடூரமான நிகழ்வுகள் ஏற்படும் போது இப்படியாக நாம் உணர்வது சாதாரணமானதானாலும் இவ்வாறான அச்சவுணர்வு ஏனையவர்களை நாம் பார்க்கும் தோரணையை தீர்மானிக்க அனுமதிக்கலாகாது. எமது நாட்டில் வாழும் பெரும்பாலான மக்கள் சமாதானத்தை விரும்புபவர்களாகவும் சகிப்புத் தன்மை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். எனவே சில தீவிரவாத சக்திகள் நாம் சிந்திக்கும் பாணியை மாற்ற அனுமதிக்கக் கூடாது.

அதே நேரத்தில் நாட்டில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களைப் போல இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமும் பல்லின, பல்மதத்தவர்களைக் கொண்ட சமூகமாகும் என்பதனை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். இது எமது மிகப் பெரும் பலங்களில் ஒன்றாகுமென நான் நம்புகின்றேன். எமது கலாச்சாரங்களின் தனித்துவமானதும் சிறப்பானதுமான மொழி, சம்பிரதாயம், உணவு, மற்றும் உடை என்பன ஏதோ ஒரு வகையில் எமது அடையாளத்திற்கு பங்களிப்பினை செய்கின்றது. இது நாம் உண்மையில் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

இந்த வேளையிலே, எம்மைச் சுற்றி பயமும் சந்தேகமும் காணப்படுகின்ற போது நாம் எம் ஒவ்வொருவருக்குமிடையிலே இருக்கின்ற உறவினை பலப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுடன் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினுள் ஒவ்வொருவருக்கும் இடையிலான மேலதிக புரிந்துணர்வை ஏற்படுத்தும்படியாக எமது பன்முகத்தன்மையினை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பன்முகத் தன்மை எம்மை பிரிப்பதற்கு இடங்கொடுக்காமல் எவ்வாறு பன்முகத்தன்மையினை பயன்படுத்தி பலம்பெறலாம் என்பதற்கு நாட்டிலிருக்கும் ஏனையோருக்கு நாம் உதாரணத்துவமாக இருக்க முடியும்.

உங்களுக்கிடையில் முன்னர் இருந்த நட்பினைவிட அதிக நட்பினை வளர்த்துக்கொள்ள நான் உங்களை வேண்டிக்கொள்கின்றேன். விசேடமாக உங்களைப் போலல்லாதவர்களுடன் பழகி உங்களிலும் வேறுபட்டவர்கள் தொடர்பான புரிந்துணர்வுகளை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என நான் கேட்டுக் கொள்கின்றேன். இதுவே நாம் இப்போதைய நிலையிலிருந்து மீண்டு ஒரு ஒன்றுபட்ட நாடாக முன்நோக்கிச் செல்வ உதவுவதாக இருக்கும்.

உயிர்த்த ஞாயிறு தினத்தின் சோக நிகழ்விற்குப் பின் பெரும்பாலான இலங்கையர்கள், பயங்கரவாதிகள் நாம் யாரென காண்பித்து எம்மை பிரிக்க இடமளிக்கக்கூடாது என்பதன் முக்கியத்துவத்தினைப் பற்றி எடுத்துரைத்துள்ளனர். இந்த நாட்டில் நாம் பல்வேறு கடினமான சூழ்நிலைகளைக் கடந்து வந்திருப்பதுடன் அக் கொடிய காலப்பகுதிக்கு மீண்டும் செல்ல நாம் யாரும் விரும்பவில்லை. எமது பல்கலைக்கழகத்தினுள் யாரும் ஒதுக்கப்பட்டவர்களாக, விலக்கப்பட்டவர்களாக, பிரித்துநோக்கப்படவர்களாக உணராத விதமாக உறுதிசெய்தல் நாம் எதிர்காலத்திற்காக எடுக்கக்கூடிய மிக முக்கிய நடவடிக்கையாகும். இந்த சோக சம்பவத்திலிருந்து மீண்டுவர முயலுவதற்கு ஏதுவாக எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் உங்களால் ஏலுமான சகல உதவிகளையும் ஆதரவினையும் வழங்குவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன். எமக்கிடையே சகிப்புத்தன்மையையும் ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளைக் குலைத்து எம்மைப் பிரிப்பதற்குரிய நடவடிக்கைகளில் பல சக்திகள் ஈடுபடுவதால் இது ஒரு இலகுவான காரியமல்ல. கலந்துரையாடல்கள், விழிப்புணர்வுகள், இந்த விடயங்கள் பற்றிய உரையாடல்கள் என்பவற்றினை நடாத்துவதற்கு பல்கலைக்கழகம் வசதிகளை ஏற்படுத்தும். பல்கலைக்கழகத்தினுள் இருக்கும் வேறுபட்ட சமூகங்களினது உறவுகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளையும் உரையாடல்களையும் ஆரம்பிக்குமாறு நாம் மாணவர் சமூகங்களைக் கேட்டுக் கொள்கின்றோம். கண்ணியத்துடனும் புரிந்துணர்வுடனும் ஒருவரையொருவர் பாதுகாக்க அனைத்து சந்தர்ப்பங்களிலும் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். பல்கலைக்கழகத்திற்குள் இருக்கும் எவரும் பயத்துடனோ, பாகுபாட்டுடனோ அல்லது விலக்கப்பட்டவர்களாகவோ உணராது இருப்பதனை நாம் உறுதிசெய்துகொள்ள வேண்டும் என்பதனை நான் மீண்டும் ஒருதடவை உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். இவற்றைக்குறித்து உங்களுக்கேதேனும் விளக்கம் தேவையெனின் பல்கலைக்கழக உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களிடம் ஏதேனும் கேள்விகள் இருப்பின் அல்லது மேலதிகமாக கலந்துரையாட விரும்பினால், அல்லது இது தொடர்பாக ஏதேனும் கருத்துக்கள் இருப்பின் பீட உறுப்பினர்கள், மாணவ ஆலோசகர்கள் அல்லது எமது ஆலோசனை அலகுடன் தொடர்பு கொள்ளமாறு உங்களைக் கேட்டுக் கொள்கின்றென்.

பின்வருவன முழுப் பல்கலைக்கழகச் சமூகத்தின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கென எம்மால் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளாகும். இவை மத்திய வளாகத்திற்கும் பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களிற்கும் பொதுவானவையாகும். பெரும்பாலான இந்த நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் வருகையாளர்களுக்குப் பொருத்தமானவையாகும்.

- அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்தினுள் எவ்வேளையிலும் தேசிய அடையாள அட்டையுடன் மாணவர் பதிவுப் புத்தகத்தினையும் வைத்திருத்தல் வேண்டும்.

- தேசிய அடையாள அட்டையுடன் மாணவர் பதிவுப் புத்தகத்தினையும் பல்கலைக்கழகத்திற்குள் நுழையும் போது காண்பிக்க வேண்டியிருப்பதுடன் பல்கலைக்கழக வளாகத்தினுள் பல்கலைக்கழக அலுவலர்களால் வேண்டப்படும் போதும் அதனைக் காண்பிக்க வேண்டும்.

- நடைபாதை நடவடிக்கைகளுக்காக 1, 3 மற்றும் 4ஆம் இலக்க வாயில் கதவுகளை மட்டுமே பயன்படுத்த முடியும்.

- வாகனங்களில் வருவதற்கு 3 மற்றும் 4 ஆம் இலக்க வாயில் கதவுகளை மட்டுமே பயன்படுத்த முடியும்.

- மறுஅறிவித்தல் வரை 2ஆம் இலக்க வாயில் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.

- பல்கலைக்கழகத்தினுள் நுழையும் அனைத்து வாகனங்களும் வாயில் கதவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் பரிசோதிக்கப்படும்.

- பல்கலைக்கழகத்தினுள் எடுத்து வரப்படும் அனைவரினதும் பொதிகள் வாயில் கதவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் பரிசோதிக்கப்படும்.

- நபரின் அடையாளத்தினை மறைக்கும் வகையில் முகத்தை முழுமையாக மறைக்கும் அனைத்து விதமான முகம் மறைக்கும் அங்கிகளும் பல்கலைக்கழக வளாகத்தினுள் அனுமதிக்கப்படமாட்டாது.

- பல்கலைக்கழக கதவுகள் இரவு 8.30 மணிக்கு மூடப்படும். எனவே இரவு 8.30 மணிக்கு முன்னால் அனைவரும் பல்கலைக்கழகத்தினை விட்டு வெளியேற வேண்டும்.

- பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு கமரா கொள்கைக்கு அமைவாக தேவையான இடங்களில் மேலதிக கண்காணிப்பு கமராக்களை பொருத்துவதன் மூலம் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்கும்.

- பொதிகள் மற்றும் ஏனைய பொருட்களை எச்சந்தர்ப்பத்திலும் எவ்விடத்திலும் அநாதரவாக விட்டுச் செல்லலாகாது.

- மாணவர்களின் சகல உடைமைகளும் மாணவர்கள் பல்கலைக்கழகத்தினை விட்டுச் செல்லும் போது எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

- வாகனங்களை (மோட்டார் சைக்கிள் உட்பட) அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் நிறுத்தப்படல் வேண்டும்.

- மோட்டார் சைக்கிள் உட்பட சகல வாகனங்களும் பல்கலைக்கழக வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்படும்போது உரிமையாளர்கள் தமது வாகனத்தின் மீது தமது பெயர் மற்றும் தொடர்பு இலக்கங்களை விட்டுச் செல்ல வேண்டும்.

- பல்கலைக்கழகத்திற்கு வரும் அனைத்து வருகையாளர்களும் 1, 3, மற்றும் 4 ஆம் இலக்க வாயில் கதவுகளில் தமது தேசிய அடையாள அட்டைகளைக் கையளித்து வருகையாளர் அனுமதி அட்டையினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பல்கலைக்கழக வளாகத்தினை விட்டு வெளியேறும் போது வருகையாளர் அனுமதி அட்டையினை கையளித்து தேசிய அடையாள அட்டையை மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

அனைவரினதும் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இப்பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல் படுத்த அனைத்து மாணவர்களினதும் ஒத்துழைப்பினை வேண்டுகின்றேன்.

இப்படிக்கு

உங்கள் அன்பார்ந்த

சிரேட்ட பேராசிரியர் எஸ்.ஏ.அரியதுரை
துணைவேந்தர்

**தொடர்பு இலக்கங்கள்**

| | |
|---|---|
| பிரதான பாதுகாப்பு அலுவலர் | +94 11 2881344 |
| ஆலோசகர் | +94 11 2881361 |
| பிரதான மாணவர் ஆலோசகர் | +94 11 2881315 |
| பல்கலைக்கழக பொது இலக்கம் | +94 11 2881000 |